*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 519/2023***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-3 (LW-4)***

*Name / Father's Name:* ***திரு.கருப்பண்ணன் த/பெ. ராமர்***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **26.09.2025.**
துவக்க நேரம் 11.39 F.N
**1ம் எதிரி ஆஜரில்லை. 2, 3 எதிரிகள் ஆஜர்.**
**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது கெங்கவல்லியில் உள்ள 74-கிருஷ்ணாபுரத்தில் குடியிருந்து, கூலி வேலை செய்து வருகிறேன். சாட்சி ராஜா மற்றும் எதிரிகளை தெரியும். எனது ஊர்க்காரர்கள் ஆவார்கள்.

2) தேதி, மாதம் நினைவில்லை. கடந்த சுமார் ஒரு வருடத்திற்கு முன்பு ஒருநாள் எங்கள் ஊரில் இவ்வழக்கின் இரண்டு தரப்பினர்களுக்கிடையே தகராறு நடந்ததாக கேள்விபட்டேன். நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை. யார், யாருக்கிடையில் சண்டை நடந்தது என்று நான் எதுவும் கேட் தெரிந்துகொள்ளவில்லை. போலிசார், என்னிடம் நடந்த சம்பவம் குறித்து விசாரணை செய்யவில்லை.

**அரசுத்தரப்பு சாட்சி போலிசாரின் குவிமுச 161 விசாரணையின் போது கூறிய சங்கதிகளுக்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளதால், அரசுத்தரப்பில் பிறழ்சாட்சியாக கருதி சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்குவிசாரணை**

கடந்த 28.09.2023 அன்று இரவு சுமார் 08.00 மணியளவில் எதிரிகள், சாட்சி ராஜாவை அவர் தோட்டத்திலிருந்து வரும்பொழுது, அவரை வழிமறித்து,

கெட்ட வார்த்தையால் திட்டி, இரும்புக்கம்பியால் அடித்து, ராஜாவின் இருசக்கர வாகனத்தை அதே இரும்புக்கம்பியால் அடித்து சேதப்படுத்தியதாகவும், மேலும் கொலை மிரட்டல் விடுத்ததாகவும், சண்டையிடும் சத்தம் கேட்டு நான் சம்பவயிடத்திற்கு சென்று பார்த்ததாகவும், போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்பொழுது வழக்கு தரப்பினர்கள் இருவரும் சமாதானமாக செல்வதால், வழக்கின் எதிரிகளை இவ்வழக்கிலிருந்து காப்பாற்றவேண்டி எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

முடிவு நேரம் 11.45 F.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2025.09.26 17:34:41 +0530

Judicial Magistrate No.2, Attur.